வடகிழக்கு பருவமழை 2018
தனிகவனம்/மிக அவசரம்

# திருக்கோவிலூர் சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.ஸ்ரீ. சாருஸ்ரீ, இ.ஆ.ப.,

ந.க.அ4/5510/2017 நாள்:17.09.2018

பொருள்: இயற்கை இடர்பாடுகள் - திருக்கோவிலூர் வட்டம் - வடகிழக்கு பருவமழை 2018 - வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் - அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான காலங்களில் துரித நடவடிக்கை மேற்கொண்டு உடனுக்குடன் புள்ளி விவரங்கள் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பித்தல் - வட்ட அளவில் பல்வேறு குழுக்கள் அமைத்து ஆணையிடுதல்.

பார்வை: 1 .விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரை நாள்:30.08.2018.
2. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.பே.மே/24388/2018 நாள்: 09.09.2018

---------

ஆணை:

2018 வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு திருக்கோவிலூர் வட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப் பணிகள் குறித்த வாராந்திர அறிக்கை அனுப்பிடவும், மற்றும் அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான காலங்களில் துரித நடவடிக்கை மேற்கொண்டு புள்ளி விவரங்களை உடனுக்குடன் அறிக்கை வாயிலாக சமர்ப்பித்திடும் பொருட்டும், திருக்கோவிலூர் வட்டத்தில் மண்டல அளவிலான குழுக்கள் அமைத்து அலுவலர்கள் நியமனம் செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | வட்டம் | துறை | நியமனம் செய்யப்படும் அலுவலர் | கைப்பேசி எண் |
|---|---|---|---|---|
| | மண்டலம் – 1<br>திரு.செந்தில்குமார்<br>மண்டல துணை வட்டாட்சியர் –2,<br>திருக்கோயிலூர் | வருவாய்த் துறை | திரு.சிட்டிபாபு<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர் | 9894625123 |
| | | ஊரக வளர்ச்சித் துறை | திரு.செல்லதுரை,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>திருக்கோயிலூர் | 7402606339 |
| | | சுகாதார துறை | திரு.பிரவீண்<br>உதவி மருத்துவர் அலுவலர்,<br>எடையூர் | 9500014490 |
| | | மின்சார வாரியம் | திரு.மரியராஜ்<br>இளநிலை பொறியாளர்,<br>திருக்கோயிலூர் | 9445855870 |
| | | கால்நடைத்துறை | திரு.பாலசுப்ரமணியன்<br>கால்நடை மருத்துவர்<br>திருக்கோவிலூர் | 9443046847 |
| | | தீயணைப்புத் துறை | திரு.செல்வராஜ்<br>தீயணைப்ப நிலைய அலுவலர்<br>திருக்கோவிலூர் | 9445086496 |
| | | பொதுப்பணித்துறை | திரு.பாலாஜி<br>உதவி பொறியாளர்<br>திருக்கோவிலூர். | 9884870856 |
| | | வேளாண்மைத்துறை | திரு.ராஜா<br>வேளாண்மைத்துறை அலுவலர்<br>திருக்கோவிலூர் | 8124391560 |
| | | காவல்த்துறை | திரு,ரத்திணசபாபதி<br>காவல் ஆய்வாளர்<br>திருக்கோவிலூர். | 9498106999 |
| | | நெடுஞ்சாலைத்துறை | திரு.திருநாவுக்கரசு<br>உதவி கோட்டப்பொறியாளர்<br>திருக்கோவிலூர் | 7402582792 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மண்டலம் – 2<br>திரு.பசுபதி<br>மண்டல துணை வட்டாட்சியர் –1<br>திருக்கோயிலூர் | வருவாய்த் துறை | திரு.சண்முகம்,<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர் | 9585868561 |
| | | ஊரக வளர்ச்சித் துறை | திரு.கலிவரதன்<br>வட்டார வளர்ச்சி அலுவலர்<br>திருவெண்ணை நல்லூர். | 7402606350 |
| | | சுகாதார துறை | டாக்டர்,திரு.சுரேஷ்<br>மருத்துவர்<br>ஜி,அரியூர் | 7010495798 |
| | | மின்சார வாரியம் | திரு,கிருபாகரன்<br>இளமின் பொறியாளர்<br>சித்திலிங்கமடம் | 9445855873 |
| | | கால்நடைத்துறை | திரு.ஆலமரத்தான்<br>கால்நடை மருத்துவர்<br>திருவெண்ணைநல்லூர் | 9443681349 |
| | | தீயணைப்புத் துறை | திரு.சா,ராமலிங்கம்<br>தீயணைப்பு நிலையம்<br>திருக்கோவிலூர் | 7094562767 |
| | | பொதுப்பணித்துறை | திரு.பிரசன்னா<br>உதவி பொறியாளர்<br>திருவெண்ணைநல்லூர் | 9787108409 |
| | | வேளாண்மைத்துறை | திரு.பா.முத்து<br>துணை வேளாண்மை அலுவலர்<br>திருவெண்ணைநல்லூர் | 9442390312 |
| | | காவல் துறை | திரு.பாபு<br>உதவி காவல் ஆய்வாளர்<br>திருவெண்ணைநல்லூர் | 9498106999 |
| | | நெடுஞ்சாலைத்துறை | திரு.திருநாவுக்கரசு<br>உதவி கோட்டப் பொறியாளர்<br>திருக்கோவிலூர். | 7402582792 |
| | மண்டலம் – 3<br>திரு.இளவரசன்<br>தனி<br>வட்டாட்சியர்(ச.பா.தி)<br>திருக்கோவிலூர். | வருவாய்த் துறை | திரு.நா.சுரேஷ்,<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர் | 9788999306 |
| | | ஊரக வளர்ச்சித் துறை | திரு.கௌதமன்<br>துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>முகையூர் | 9943903404 |
| | | சுகாதார துறை | திரு.பழனிவேல்<br>சுகாதார ஆய்வாளர்,<br>மணலூர்பேட்டை | 8531013100 |
| | | மின்சார வாரியம் | திரு.சரவணன்<br>மின்கம்பியாளர்<br>காங்கியனூர் | 9486218511 |
| | | சுகாதார துறை | திரு.வெங்கடேஷர்<br>சுகாதார ஆய்வாளர்,<br>எடையூர் | 9500201120 |
| | | தீயணைப்புத் துறை | திரு.விநாயகம்,<br>தீயணைப்பு அலுவலர்,<br>திருக்கோவிலூர். | 8122692703 |
| | | பொதுப்பணித்துறை | திரு.கே.சுதாகர்,<br>பாசன உதவியாளர்,<br>திருக்கோவிலூர். | 6380102796 |
| | | வேளாண்மைத்துறை | திரு.மகாதேவன்,<br>துணை வேளாண்மை அலுவலர்,<br>திருக்கோயிலூர் | 9659632749 |
| | | காவல் துறை | திரு.ரவிச்சந்திரன்,<br>துணை ஆய்வாளர்,<br>திருக்கோயிலூர் | 984239130 |
| | | நெடுஞ்சாலைத்துறை | திரு.ஜெயபால்,<br>சாலை ஆய்வாளர்,<br>திருக்கோவிலூர் | 9976281604 |

2018-ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளபட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த விவரங்கள்:

1. மண்டல அலுவலர்கள் தங்கள் மண்டலத்தில் உள்ள கிராமங்கள் அளவிலான தன்னார்வலர்கள் குழுவுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

2. வடகிழக்கு பருவமழைக் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து குழுக்கூட்டம் நடத்தி பயிற்சி அளித்தல் வேண்டும். பயிற்சி அளித்தமைக்கான அறிக்கையினை புகைப்படத்துடன் தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.
3. கண்டறியப்பட்டுள்ள பகுதிகளுக்கு தனிக்குழு அலுவலர்கள் நேரிடையாக களஆய்வு மேற்கொண்டு தாழ்வான பகுதிகள் (Lowlying Areas), ஊரகப் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகும் ஏரிகள், மதகுகள், தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலையினை ஒட்டியுள்ள ஏரிகள், கால்வாய்கள், பாலங்கள், மேம்பாலங்கள், பழுதடைந்த மின்கம்பங்கள், சாலைகள் ஆகியவைகள் குறித்து தற்கால நிலையினை பார்வையிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் (Requirements for Responsibilities for Preparedness) குறித்த கருத்துருவினை தகுந்த புகைப்படத்துடன் தனிக்குழு அலுவலர்கள் தங்களது அறிக்கையினை தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.
4. நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், ஏரி உடைப்புகளை சரிசெய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களையும் பிதிவாரந்தோறும் கீழ்க்கண்ட படிவத்திலான அறிக்கையினை சமர்ப்பித்திட வேண்டியது.
5. மண்டலத்திற்குரிய தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், ஊரக சாலைகள் ஆகியவற்றின் குறுக்கே அமைந்துள்ள ஆறுகள், குறுகியபாலங்கள், மேம்பாலங்கள் ஆகியவற்றின் பெயர்கள் மற்றும் அளவுகளுடன் விவரங்களை கண்டறிந்து வைத்திருப்பதுடன், கட்டுமானத்தன்மையினை உறுதி செய்திட தக்க நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை அனுப்ப வேண்டியது.
6. மழைக்காலங்களில் அவசர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநரைக் கொண்டு தனியார் மருத்துவமனை மருத்துவர்களுடன் கூட்டம் நடத்தி, தனியார் மருததுவமனை குறித்த விவரங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றினை கைவசம் வைத்திருக்கும் பொருட்டு மண்டல அலுவலர்கள் சம்பந்தப்பட்ட, சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநருக்கு கடிதம் அனுப்பிட வேண்டியது. இந்நேர்வு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை சமர்ப்பிதத்திட வேண்டியது.
7. தங்கள் மண்டலத்திற்குட்பட்ட ஏரிகள், மதகுகள், கால்வாய்கள், குளம்/குட்டைகள் மற்றும் இதர நீர்நிலைகள், தாழ்வான பகுதிகள், சாலைகள், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மருத்துவ மையங்கள், துணை சுகாதார மையங்கள், தனியார் மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், பொதுக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக்கூடங்கள், திருமண மண்டபங்கள், பல்நோக்கு புயல்பாதுகாப்பு மையக்கட்டிடங்கள், கடற்கரையோரப் பகுதிகளை ஆய்வு செய்தல் மற்றும் நீச்சல் வீரர்கள் ஆகியவற்றின் விவரங்களை தொடர்பு கொள்ளும் வகையில் உரிய தொலைபேசி எண்ணுடன் பெற்று அறிக்கையினை சமர்ப்பித்திட வேண்டியது.
8. தொலைபேசி எண் 1077ஐ பருவமழையின்போது அவசர காலத்தில் அனைத்து பொதுமக்களும், அலுவலர்களும் தொடர்பு கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டியது.
9. மழைக்காலத்திலன் போது உபயோகப்படுத்தப்படும் மணல்மூட்டைகள், சவுக்கு மற்றும் பனைமரதடுப்புக்கட்டைகள் ஆகியவற்றை எளிதில் பயன்படுத்தும் வகையில் அருகாமையில் உள்ள இடங்களை தேர்வு செய்து அதிகளவில் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டியது.
10. மண்டல அலுவலர்கள் தங்களது வட்டத்திற்குட்பட்ட கடந்த ஆண்டு அதிகளவு மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏதேனும் ஒரு இடத்தை தேர்வு செய்து, பொதுமக்கள் வடகிழக்கு பருவமழையிலிருந்து தங்களை எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்பது பற்றி அனைத்து துறை சார்ந்த அலுவலாகள், பொதுமக்கள் முன்னிலையில் செயல்முறை விளக்க நிகழ்ச்சி நடத்தி, அதற்கான அறிக்கையினை தகுந்த புகைப்படத்துடன் தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.

11. அனைத்து மண்டல அலுவலர்களும் தங்களது குழு உறுப்பினர்களைக் கொண்டு பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பணி முன்னேற்ற அறிக்கையினை பிரதிவாரம் வெள்ளிக்கிழமை தோறும் தவறாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவிற்கு சமர்பித்திட வேண்டியது.
12. தனிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு தங்கள் வட்டத்தில் மழை/வெள்ளத்தினால் பாதிக்கப்படகூடிய பகுதிகளின் வரைபடங்கள் (Vulnerability Maps (Place and People) for Flood Prone Areas), கிராம வரைபடங்கள், வழித்தடவரைபடங்கள் (Evacuation Routes) குண்டும் குழியுமான பகுதிகள், சுயஉதவி குழுக்கள், நாட்டு நலப்பணித்திட்டம், அரசு சாரா நிறுவனங்கள், தேசிய மாணவர்படை ஆகியவைகள் குறித்த விவரங்கள் தொகுத்து வைத்திடவும், மழைக்காலங்களில் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் பொருட்கள் குறித்த விவரங்களையும் கைவசம் வைத்திருக்கவும் வேண்டியது.

வடகிழக்கு பருவமழை காலங்களில் அனைத்து மண்டல அலுவலர்களும் எவ்வித சுணக்கமின்றி சிறப்பு கவனம் செலுத்தி, தனிக்குழு அலுவலர்களிடமிருந்து அறிக்கையினை விரைவாக பெற்று உடனுக்குடன் திருக்கோவிலூர் சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவிற்கும் தெரிவித்திடுமாறு மண்டல அலுவலர்களுக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- தி.சாருஸ்ரீ
சார் ஆட்சியர்,
திருக்கோவிலூர்.

//உ.ந.உ.ப//

நேர்முக உதவியாளர்
17/7/18

பெறுநர்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள்

நகல்
வருவாய் வட்டாட்சியர்,
திருக்கோவிலூர்

நகல்
மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.